2008 ஏப்ரல் 17]

(முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 120. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

பால் குளிரூட்டும் நிலையம்

***34971—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி அதிகமான கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி. ஏராளமான கறவை மாடுகள் அங்கே இருக்கின்றன. அங்கு உற்பத்தியாகும் பால் முழுவதும் தனியார் நிறுவனத்தின்மூலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. நன்னிலம் தொகுதியில் உள்ள சன்னாநல்லூரில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

திருமதி பி. பத்மாவதி: சொந்தக் கட்டடத்தில் இருக்கின்றது. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாட்டை மேலும் அதிகப்படுத்தி அங்கு உற்பத்தியாகின்ற பால் முழுவதையும் கொள்முதல் செய்வதற்கான

வகையிலே அரசு வழிவகை காண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பகுதியில் உற்பத்தியாகும் பால் முழுவதையும் சொசைட்டியின்மூலமாக எடுத்து, பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு 3 ஏக்கர் நிலமும் 5 கோடி ரூபாய் வரை செலவும் பிடிக்கும். அதற்கு மாற்றாகத்தான், அந்தந்தப் பகுதியிலே 2,000 லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யப்படுவதற்கு, மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாக பொறுப்பேற்ற பிறகு, 150–க்கு மேற்பட்ட மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நன்னிலம் பகுதியைப் பொறுத்த அளவில் தற்போதுதான் 15 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதியதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே 5,000 லிட்டர் வரை அல்லது 2,000 லிட்டர் பால் வருமேயானால், அந்தப் பகுதியிலும் ஒரு மொத்த பால் குளிர்விப்பான் அமைக்க வாய்ப்பு இருக்கும். தற்போது நன்னிலத்தில் இருந்து திருவாரூரில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மொத்த பால் குளிர்விப்பான் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த இடத்திற்கு பால் எடுத்து வரப்படுகிறது. மீண்டும் வருகிற காலத்தில் நன்னிலம் பகுதியிலே 2,000 லிட்டர் பால் கொள்முதல் செய்வதற்கான வாய்ப்பு இருக்குமேயானால், அங்கேயும் ஒரு மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அதற்கான வகையிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்தி எதிர்காலத்தில் அதைச் செயல்படுத்த பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நிச்சயமாக அதற்கான வாய்ப்புகள் அங்கு அதிகமாக இருக்கின்றன.

2008 ஏப்ரல் 17]

இன்னும் கூடுதலான சொசைட்டி அமைப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருக்கின்றன. அதிகமான பால் உற்பத்தி கிடைக்கும். எனவே, அந்த வகையிலே எதிர்காலத்திலே அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை கேட்டு நன்றி சொல்லி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

சென்னை, மத்திய சிறை இருந்த இடத்தினை மெட்ரோ இரயில் நிருவாகத்திற்கு மற்றும் அரசு பொது மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அளிப்பது—

பொதுப் பணித் துறை இடத்தினை ஸ்டான்லி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அளிப்பது—

மற்றும்

சென்னை, அண்ணா சாலையில் தோட்டக்கலைச் சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் உலகத் தரத்திலான சிறப்பு வேளாண் தோட்டக்கலைப் பூங்கா அமைப்பது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கையினை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110—ன்கீழ் இந்த அறிக்கையை முன்வைக்கின்றேன்.

சென்னை மாநகரின் மையப் பகுதியிலிருந்த மத்திய சிறையினை திருவள்ளூர் மாவட்டத்திலே உள்ள புழல் பகுதிக்கு மாற்றிய